# ஸ்ரீ காயத்திரி வழிபாடு



அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்
320, செட்டியார் தெரு,
கொழும்பு -11
தொலைபேசி: 334004

# விருத்தம் 1

உ

## ஸ்ரீ காயத்திரி வழிபாடு

பதிப்பாசிரியர்:
ஆறுமுகம் கந்தையா J.P

அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்
320, செட்டியார் தெரு
கொழும்பு - 11
தொலைபேசி - 334004

25/=

# முகவுரை

இந்தப் புத்தகத்தில் விளக்கப்பட்டுள்ள காயத்ரி சாதனை எல்லா ஜாதியினரும் ஆண்களும், பெண்களுமாக செய்யலாம். பிராமணர்கள்தான் செய்யத் தகுதி உள்ளவர்கள். மற்றும் பெண்கள் செய்யக்கூடாது என்பது தவறான கருத்து. அக்காலத்தில் ஆண்களும், பெண்களும், எல்லா ஜாதியினரும் செய்து வந்தார்கள். ஏன்? **இந்தச் சக்தி வாய்ந்த மந்திரத்தை உலகிற்கு அறிமுகப்படுத்திய மகரிஷி விஸ்வாமித்திரரே பிராமண ஜாதியில் பிறந்தவர் அல்லவே!**

காயத்ரி சக்தி எங்கும் நிறைந்த பரமாத்மாவின் சத்திய ஒளியின் தத்துவம். ஆகையால் ரூபத்தில் நம்பிக்கை இல்லாத மக்கள் எங்கும் நிறைந்த பேருண்மையின் ஒளியாக மனதில் தியானித்து இச்சாதனையைச் செய்யலாம். காயத்ரி சக்தியை அன்னை ரூபத்தில் வழிபட விரும்புகிறவர்கள், படத்தின் உதவியுடனோ அல்லது மனதில் ரூபத்தை தியானித்தோ இச்சாதனையைச் செய்தால் பலன் நிச்சயம். இந்துசமயத்தின் எல்லா பிரிவுகளும் ஒரே உண்மையில் தான் முடிகிறது.

இந்த சாதனையை பூஜை. உபாசனை என்று குறிப்பிட்டாலும் செய்வதற்கும் ஒரு சுத்தமான இடம், உட்கார ஒரு விரிப்பு, சிறிது நீர், ஒரு ஜபமாலை மற்றும் ஒரு ஊதுவர்த்தியே போதுமானது. வைப்பது அவரவர்

விருப்பம். தொடர்ந்து ஒரு வாரம் செய்தால், மந்திரங்கள் மனதில் பதிந்து, முழுச்சாதனை புரிய அரை மணி நேரமே ஆகும். நாம் நம்முடைய நலத்திற்கு அரை மணி நேரம் தினமும் ஒதுக்குவது கடினமா?

புத்தகத்தில் விளக்கியுள்ள பாவனையுடன் மந்திரத்தை ஜபித்தால் வாழ்க்கையில் நேர்மை யானவர்கள் சில நாட்களிலேயே பலன் காணலாம். உள்ளத்தில் தெம்பும் உற்சாகமும் பெருகும். மனோதிடம் அதிகரிக்கும். மாணவ மாணவிகள் புத்தியும் ஞாபக சக்தியும் அதிகரித்து வாழ்க்கையில் வெற்றி பெறுவார் கள். ஆனால் உள்ளத்தில் நேர்மை இல்லாதவர்கள், நல்வழியில் நடக்க விரும்புகிறவர்கள், இதைத் தொடர்ந்து செய்து வந்தால் அவர்களும் வெற்றி பெறுவார்கள். ஆனால் முதல் சில நாட்களில் சக்தி, உள்ளத்தை தூய்மையாக்குவதற்கு செலவழியும், வாழ்க்கையில் ஒன்றையும் இலவசமாகப் பெறமுடியாது.

இதனால் சாதகன், சுற்றியுள்ளோர் மற்றும் நாடும் நலம் பெறுகிறது.

– பண்டிட் ஸ்ரீராம் சர்மா ஆசார்யா.

ॐ

# गायत्री मन्त्रम्

## ஸ்ரீ காயத்ரி த்யானம்

ஓம் பூர் புவ: ஸ்வ:
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ ந: ப்ரசோதயாத்

**பொருள்:**

நம்முடைய உயிராற்றலாகவும், துக்கத்தை அழிப்பதாகவும், இன்பமே வடிவாகவும் உள்ள அந்த சூரியனைப் போன்ற ஒளிமயமானதும், தனக்கு மேலாக வேறு ஒன்றும் இல்லாததும், நம் பாபங்களை அழிக்கக் கூடியதுமான தெய்வீக பரம் பொருளை நாம் நம்முடைய மனதில் இருத்தி தியானிப்போமாக! அந்த பரம்பொருள் நமது அறிவை நல்வழியில் ஈடுபடுத்தட்டும்.

இருபத்தி நான்கு அக்ஷரங்களாலான இந்த மந்திரத்தின் சொற்களின் கோர்வை விஞ்ஞான ரீதியாக தொடுக்கப்பட்டது. இந்த ஜபத்தால் சாதகனின் உள் உறங்கி இருக்கும் கேந்திரங்கள் விழித்துக் கொள்கின்றன. இதனால் சக்தியின் மூலக் கருவறையின் வாயில்கள் திறக்கப்படுகின்றன.

இந்த மந்திரத்தில் மூன்று மலமும், மூன்று அடிகளும் இருக்கின்றன. முதல் அடி பரமாத்மா எங்கும் நிறைந்துள்ளார் என்ற உண்மையைப் பரிந்துரைக்கிறது.

எந்த திவ்ய குணங்களை தியானிக்கிறோமோ, அவை நம்முள் அவதரிக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்யப்படுகிறது இரண்டாவது அடியில்.

நமது புத்திக்கு சன்மார்க்கத்தை காண்பிக்க வேண்டி இந்த திவ்ய குணங்களின் சக்தியை தியானிக்கிறோம் என்ற உண்மை மூன்றாவது அடியில் விளக்கப்பட்டுள்ளது.

காயத்ரி மந்திரத்தில் உள்ள சொற்களை ரிஷிகள் தேர்ந்தெடுத்து பொருத்தமாக வரிசைப்படுத்தி அமைத்திருக்கிறார்கள். அதனால்,

(1) அது ஆழ்ந்த பொருள் உள்ள மந்திரமாக அமைந்துள்ளது.

(2) அதை ஜபிக்கும் பொழுது உண்டாகும் அலை அதிர்வுகள் மிகுந்த ஆற்றலைக் கொடுக்கின்றன.

**ॐ भूर्भुवः स्वः तत्सवितुर्वरेण्यम् भर्गो ।**
**देवस्य धी महि धियो योनः प्रचोदयात् ॥**

ஓம் பூர் புவ: ஸ்வ: தத் ஸவிதுர் வரேண்யம்

பர்கோ தேவஸ்ய தீமஹி தியோ யோ ந: ப்ரசோதயாத்

**இதன் பொருள்:** *பரம்பொருள் நம் அறிவொளியைத் தூண்டி நம்மை நேரான புனிதப் பாதையில் செலுத்துவதாக. இது ஒரு நீதிக் கருத்து.*

நேர்மையான வழியைக் காட்டும் ஞானம். இந்த ஞானத்தை ஒருவன் அடைந்து விட்டால் அவன் பின்னர் நடக்கப்போவதை சிந்தித்து செயல்படுவான். அதனால் தனக்கு துன்பம் வராமல் பார்த்துக் கொள்வான். அவன் சிந்தனை சரியான முறையில் அமைவதால் மிகப் பெரிய சிக்கல்கள் அவனுக்கு சாதாரண விஷயமாகிவிடும். அவன் முட்டாள்தனமாக தவறான முடிவுகளை மேற்கொண்டு வீண்வம்பைஇ விலைக்கு

வாங்கமாட்டான். காயத்ரி ஜபசாதனை இவ்வாறு ஒருவனை சரியாக சிந்தனை செய்து பின்னர் வருவதையும் முன்னரே உணர்ந்து அதற்கேற்ப தெளிவான முடிவு எடுத்து உறுதியுடன் செயல்பட்டு வெற்றிகாணச் செய்கிறது.

# गायत्री मन्त्रम्

## காயத்ரி மந்திரம்

பதவுரை

| | | |
|---|---|---|
| ஓம் | : | பரம்பொருளாகிய கடவுள் |
| பூர் | : | (நம்முடைய) உயிராற்றலாகவும் |
| புவ: | : | துன்பங்களை நீக்குபவராகவும் |
| ஸ்வ: | : | இன்பமே வடிவானவனாகவும் |
| யோ | : | எது |
| ந: | : | நம்முடைய |
| தியோ | : | அறிவை |
| ப்ரசோதயாத் | : | தூண்டுகிறதோ |
| தத் | : | அந்த |
| சவிதுர் | : | சூரியனைப் போன்ற ஒளிமயமானதும் |
| வரேணியம் | : | தனக்கு மேலாக வேறு ஒன்று இல்லாததும் |
| பர்கோ | : | நம்முடைய பாபங்களைப் போக்கி நம்மைப் புனிதமாக்குவதும் (ஆன) |
| தேவஸ்ய | : | பரம்பொருளை |
| தீமஹி | : | மனதில் இருத்தி தியானிப்போமாக. |

காயத்ரி மந்திரத்தின் வேராக உள்ள ஓம் பூர் புவ: "அதன் முப்பொருள் கிளைகளாக உள்ள மூன்று வ்யாஹ்ருதிகள்".

(பூர், புவ, ஸ்வஹ) ஆகியவற்றின் விளக்க உரை:

பரம்பொருளாகிய கடவுள் நம்முடைய உயிராற்றலாகவும் நம்முடைய துன்பங்களை நீக்குபவராகவும் உள்ளார். மேற்கண்ட காயத்ரி கற்பக விருட்சத்தின் முப்பெரும் கிளைகளான வ்யாஹ்ருதிகளினின்றும் வெளிப்பட்டுள்ள ஒன்பது காயத்ரி மந்திரச் சொற்களின் தெளிவுரை.

எது நம்முடைய அறிவைத் தூண்டுகிறதோ அந்த சூரியனைப் போன்ற ஒளிமயமானதும், தனக்கு மேலாக வேறு ஒன்று இல்லாததும், நம்முடைய பாபங்களைப் போக்கி நம்மைப் புனிதமாக்குவதும் ஆன பரம்பொருளை மனதில் இருத்தி தியானிப்போமாக.

மேற்கண்ட பொருள்பட காயத்ரியை தியானிப்பவன் தெய்வாம்சம் பொருந்தியவன் ஆகிறான். காயத்ரி மந்திரத்தை ஜபிக்கத் தொடங்கும் முன் கீழ்க்கண்டவாறு மூன்று சங்கல்பங்களையும் செய்யவேண்டும். சங்கல்பங்களை கண்களை மூடிக்கொண்டு தியானநிலையில் அமர்ந்து மனதிற்குள் செய்யவேண்டும்.

**சங்கல்பங்கள்:**

1. பிரணவப் பொருளான ஆண்டவன் பூலோகம், புவர்லோகம், ஸ்வர்க்கலோகம் ஆகிய மூன்று உலோகங்களிலும் பரவியுள்ளான். அவன் எங்கும் நிறைந்தவன். இந்த உலகங்கள், படைக்கப்பட்டுள்ள பொருள்கள், பிரபஞ்சம் ஆகிய யாவுமே பரம்பொருளின் புற வடிவங்கள். அந்த ஆண்டவன் ஒவ்வொரு அணுவிலும் பரமாணுவிலும் இருக்கிறான். நான் அவனை

எல்லா இடங்களிலும் காண்கிறேன். நான் தீய எண்ணங்களையும், தீய செயல்களையும் என்னிடம் நெருங்க விடமாட்டேன். ஆண்டவனால் படைக்கப்பட்ட பிரபஞ்சம் முழுவதும் இன்பமும் அழகும் அமைதியும் வளர்வதற்கு என் முழு ஒத்துழைப்பையும் தருவதன் மூலம் நான் உண்மையாக கடவுளை வணங்குகிறேன்.

2. இந்தக் கடவுள் ஒளிமயமானவர்; தனக்கு மேலாக வேறு ஒன்றும் இல்லாதவர்; பாபங்களைக் கடந்தவர்; ஆதிபரம் பொருளானவர். இவரை நான் என் மனதில் நிறுத்தி தியானிக்கிறேன். அவ்வாறு தியானிப்பதன் மூலம் நானும் ஒளிமயமாகவும், புனிதனாகவும், பாபமற்றவனாகவும், தெய்வாம்சம் பொருந்தியவனாகவும் மாறுகிறேன். ஒவ்வொரு வினாடியும் இந்தப் புனித பண்புகள் என் மனம், மூளை, உடல் ஆகியவற்றை ஆக்கியவற்றை ஆக்கியுள்ள ஒவ்வொரு அணுவிலும் வளர்ந்து கொண்டே வருகின்றன. கடவுளின் குணங்களான இந்த நற்பண்புகளுடன் நான் ஒன்றாக இணைந்துள்ளேன்.

3. அந்தக் கடவுள் நம் அறிவைத் தூண்டி நம்மை நேர்மையான பாதையில் நடத்திச் செல்வாராக. நம்முடைய அறிவும், நம் குடும்பத்தினரின் அறிவும் தூய்மை அடையட்டும்; அவர் நம்மை நேர்மையான பாதையில் நடத்திச் செல்வாராக. நாம் எல்லாவற்றிற்கும் தாயாக உள்ள தெய்வீக ஞானத்தைப் பெற்று இந்த வாழ்க்கையிலேயே நித்யானந்தத்தைப் பெற்று பிறவிப்பயனை அடைவோமாக.

இந்த மூன்று சங்கல்பங்களையும் மனதில் நினைத்து தியானிக்கும் பொழுது:

1. ஒவ்வொரு சொல்லையும் மெதுவாகவும் ஒரு சொல்லுக்கும் மற்றொரு சொல்லுக்கும் இடையில் ஒரு நொடி இடைவெளிவிட்டும் சொல்ல வேண்டும். ஒரு சொல்லை சொல்லும்பொழுது அதன் உருவத்தை கற்பனையில் காண வேண்டும்.

முதல் சங்கல்பத்தை நினைக்குபோது கடவுள் இந்த மண்ணுலகிலும், பிறகு சுவர்க்கத்தில் இருப்பதாகவும், பிறகு பாதாள லோகத்தில் இருப்பதாகவும் கற்பனைசெய்ய வேண்டம். ஒவ்வொரு உலகத்திலும் கடவுளின் ஒளிவடிவிலும், வெப்பமாகவும், மின் அலைகளாகவும், பிராணவாயுவாகவும் இருப்பதாக கற்பனை செய்ய வேண்டும். இந்த பிரபஞ்ச காட்சிகள் எல்லாமே கடவுளின் உருவங்கள்தான். அர்ஜுனன் கண்ணனின் விஸ்வரூப தரிசனத்தைக் கண்டது போல், கடவுளின் உருவம் எங்கும் நிறைந்திருப்பதாக கற்பனை செய்து பார்க்க வேண்டும். சாதகன், கடவுள் தன்னைச் சுற்றி எங்கும் நிறைந்திருப்பது போலவும், கடவுளின் வயிற்றில்தான் இருப்பது போலவும் கற்பனைச் செய்ய வேண்டும். அதோடு, "சர்வ வல்லமையுள்ள கடவுளின் முன்பாக என் மனதிலும், உடலிலும் எப்படி கெட்ட செயல்களும் நிலைத்திருக்க முடியும்?" என்ற வினாவை மனதில் எழுப்ப வேண்டும். மேலும் " பிரபஞ்சம் முழுவதும் உள்ள ஒவ்வொரு சிறு அணுவும் கூட வணங்கி வழிபடத்தக்க கடவுளின் அங்கமே. எனவே இந்த பிரபஞ்சத்திற்கும், இதில் வாழும் மனித குலத்திற்கும்

தொண்டு செய்வதன் மூலம் இந்த உலகமாகிய கடவுளின் நந்தவனத்தை அழகுப்படுத்துவதே என் வாழ்க்கை" என்றும் சாதகன் எண்ண வேண்டும்.

இரண்டாவது சங்கல்பத்தை நினைக்கும்போது சாதகன், ஒளிமயமான தனக்கு ஒப்பில்லாத புனிதமான கடவுள், தன் இதயமாகிய அரியணையில் உட்கார்ந்திருப்பது போல் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த உருவத்தை விராட் புருஷன் உருவத்தில் (1000 தலைகள், 2000 கைகள் கொண்ட உருவத்தில்) கற்பனை செய்து பார்க்கலாம். அல்லது

2. ஸ்ரீராமன், கிருஷ்ணன், திருமால், காயத்ரி, சாவித்ரி, முருகன், கருமாரி, ஞானகுரு இப்படி ஏதாவது ஒரு உருவத்தில் ஆண் தெய்வமாகவோ அல்லது பெண் தெய்வமாகவோ மானசீகமாகக் கண்டு தரிசிக்கலாம். அல்லது

3. எரியும் விளக்காகவோ சூரியனாகவோ கூட மனக்கண்களில் காணலாம். அல்லது

4. தன் தந்தை, தாய் அல்லது குரு (விருப்பமான ஆசிரியர்) உருவத்திலும் மனதில் நினைத்து வழிபடலாம். காயத்ரி சாதகர்கள் சர்வ வல்லமையுள்ள கடவுளை காயத்ரி மாதா வடிவில் காண்பதையே விரும்பகிறார்கள். எந்த உருவில் கடவுளைக் கண்டாலும் அந்தக் கடவுள் (அந்த அழகிய புனிதமான தெய்வீக ஆற்றல்) நிலையாக தன் மனதில் வாழ்வதாகவும், மனதில் இருந்து உடல் முழுவதும் பரவுவதாகவும் கற்பனை செய்ய வேண்டும்.

மூன்றாவது சங்கல்பத்தை நினைக்கும் பொழுது காயத்ரி என்னும் தெய்வீக ஆற்றல் நம் அறிவிலும், உணர்விலும், தலையிலும், இதயத்திலும் நிறைந்திருந்து அவைகளை நேர்மையான, கடமை உணர்வுடன் கூடிய தொண்டு நெறியில் கொண்டு செல்கிறது என்று உணர வேண்டும். இந்த மூன்று சங்கல்பங்களும் ஞானயோகம், பக்தியோகம், கர்மயோகம் ஆகிய மூன்று யோகங்களின் புறச்சின்னங்கள் ஆகும். உண்மையில் காயத்ரியைப் பொருள் உணர்ந்து தியானிப்பது மேற்கண்ட மூன்று யோகங்களின் திரிவேணி சங்கமத்தில் மூழ்குவதற்கு ஒப்பாகும்.

இவ்வாறு சங்கல்பம் செய்வதால் காயத்ரி மத்திரத்தின் முழுமையான பொருள் சாதகனின் இதயத்தோடு இரண்டறக் கலந்து விடுகிறது. அதன் விளைவாக ஜபசாதனை ஆரம்பித்த சில நாட்களிலேயே சாதகனின் மனம் கெட்ட எண்ணம், கெட்ட செயல் முதலியவற்றிலிருந்து விடுபட்டு நல்லதையே நினைத்து நல்லதையே செய்யத் தொடங்கி விடுகிறது. ஆரம்பத்தில் இந்த மாற்றம் மிகவும் குறைவாகவே தெரியும். நாளடைவில் ஆன்மீக பலம் வளர வளர அவன் புனிதனாக மாறி படிப்படியாக தெய்வ நிலைக்கு உயர்ந்து கொண்டிருப்பதை உணர்வான் என்பதில் ஐயம் இல்லை.

ஜபம்: உன்னதமான குறிக்கோளை வேண்டி குறிப்பிட்ட மந்திரத்தை மீண்டும் மீண்டும் உச்சரித்தல்.

தவம்: உன்னதமான குறிக்கோளை அடைவதற்காக உடலை வருத்திக் கொள்ளுதல்.

யக்ஞம்: உன்னதமான பொருள்களை உலக நன்மையைக் கருதி உபயோகித்தல்.

## காயத்ரி உபாஸனை

காயத்ரி உபாசனை எல்லோரும் செய்ய வேண்டிய ஒரு அவசிய கடமை. எல்லாவிதமான பூஜைகளில் சிறந்த பூஜை காயத்ரி பூஜை. இதை ஆண்-பெண் இருபாலரும், எல்லா ஜாதியினராலும் செய்யக் கூடிய பூஜை. இதன் குறிக்கோள், நமது புத்தியை சாத்வீக வழியில் நடத்துவது. இதனால் நம் ஆத்ம சக்தி பெருகும். நாம் நினைக்கும் காரியங்கள் கைகூடும்.

இதை பெண்கள் செய்தால் அதிக பலன் கிட்டும். உண்மையிலே அன்னைக்கு பெண்கள் மீது என்றுமே அதிக கருணை உண்டே!

விதி பூர்வமாக செய்யும் சாதனைதான் முழுப்பயனைத் தரும். அரைகுறையாக செய்தால் பலனும் கிடையாது. நம்பிக்கையும் பிறக்காது. மருத்துவர் கூறியபடி முழுமருந்தையும் குடித்தபின்தானே வியாதி பூர்ண குணமாகும்!

சரீரத்தை சுத்தம் செய்த பிறகுதான் சாதனையை ஆரம்பிக்க வேண்டும். குளித்தபின் செய்வது மிகவும் நன்று. உடல் அசௌகரியம் இருந்தால், கை கால்களை நீரில் அலம்பி, முகம் துடைத்து உட்காரலாம்.

உட்கார வேண்டிய இடம் சுத்தமாக காற்றோட்டமாக இருப்பது நல்லது. உடலில் தூய்மையான துணிகள் உடுத்தியிருக்க வேண்டும். சுகாசனத்தில் அமருவது அவசியம். கடினமான ஆசனத்தில் உட்கார்ந்து உடல் அவதிப்பட

வேண்டாம். மனம் தன் நோக்கத்தை விட்டு, உடல் மீது செல்லும். பாய், பலகை, அருகம்புல் ஆசனமோ அல்லது தூய விரிப்போ அவசியம்.

ஜபமாலை ஒன்று அவசியம். இது துளசி அல்லது சந்தன மாலையாக இருக்கலாம். சாதனை காலை நான்குமணி முதல் மாலை ஏழரை மணி வரை. எப்பொழுது சௌகரியமோ அப்போதும் செய்யலாம். காலை எட்டு மணி வரை மற்றும் மாலை நேரத்தில் செய்வது மிக உத்தமம். மற்றபடி இரவு நேரம் மானசீகமாக ஜபம் செய்வதில் தப்பில்லை. காலையில் கிழக்கை நோக்கியும், மாலையில் மேற்கை நோக்கியும் அமருவது உத்தமம். வீட்டில் படம் இருந்தால், படத்தை நோக்கியும் அமரலாம்.

நடுவில் அவசிய காரணங்களுக்காக எழ வேண்டிய நிலை ஏற்பட்டால், மறுபடி கைகால் கழுவி தொடரலாம். ஜபத்தை சத்தமாக செய்யக்கூடாது. இவை நாம் மற்றவர்களுக்காக செய்வதில்லை. மானசீகமாக ஜபிப்பது உத்தமம். இல்லையேல் மெல்லிய குரலிலும் ஜபிக்கலாம்.

## சாதனை செய்யும் முறை

இதில் கிரமப்படி நான்கு பகுதிகள் உள்ளன.

1. பிரம்மஸந்தியா  2. பூஜை
3. ஜபம்  4. பிரார்த்தனை

பிரம்ம ஸந்தியா: ஆசனத்தில் அமர்ந்து, உடலையும் மனதையும் தூய்மையாக்க, உடலின் பஞ்ச பூதங்களின் சுத்தியை பிரம்ம சந்தியா என்று கூறுகிறோம். இவை வரிசை கிரமமாக:

1. பவித்ரி கரணம்: இடது கையில் சிறிது நீர் வைத்து, காயத்ரி மந்திரம் சொல்லிக் கொண்டே வலது கையால் தலை மற்றும் உடல் மீது நீரை தெளிக்க வேண்டும். உடலில் இருக்கும் அசுத்தம் நீங்கி உடல் தூய்மையாகுவதாக பாவனை வேண்டும்.

2. ஆசமனம்: வலது கையில் சிறிது நீர் எடுத்துக் கொண்டு காயத்ரி மந்திரம் ஒரு தடவை ஜபித்து அந்த நீரை அருந்த வேண்டும். இவை முறையே சொல், மனம் மற்றும் செயல் தூய்மையைக் குறிக்கிறது.

3. சிகை கட்டுவது: குடுமி வைத்திருப்பவர்கள் காயத்திரி ஜபம் செய்து கொண்டே அரை முடிச்சு போட வேண்டும். மற்ற எல்லோரும், பின் தலை உச்சி நடுவில் வலது கையில் ஐவிரல்களை குவித்து வைத்து ஒரு தரம் காயத்ரி மந்திரம் கூற வேண்டும். இதனால் மேரு தண்டம் சுத்தமாகிறது.

4. பிராணாயாமம்: யோக சாஸ்த்திரத்தில் பல வகைகள் விளக்கப்பட்டுள்ளன. இங்கு எல்லோரும் செய்யக்கூடிய எளிய முறை விளக்கப்பட்டுள்ளது.

வாயை மூடிக் கொள்ளவும். மனதை மூச்சின் மீது செலுத்தவும். கண்கள் அரையாக அல்லது முழுதாக மூடிக் கொள்ளவும்.

"ஓம் பூர் புவ: ஸ்வ:" என்று மனதிற்குள் கூறிக் கொண்டே நாசிகளினால் சுவாசத்தை உள்ளே நிரப்பவும். எங்கும் வியாபித்திருக்கும் பிராணசக்தி நம்முள் புகுவதான எண்ணம் மனதில் வேண்டும்.

"தத் ஸவிதுர் வரேண்யம்" என்று ஜபித்துக் கொண்டே சுவாசத்தை உள்ளே நிறுத்தவும். சூரிய ஒளி நிறைந்த இந்த பிராணசக்தி உடல் முழுவதும் பரவுவது போல் எண்ண வேண்டும்.

"பர்கோ தேவஸ்ய தீமஹி" என்று சொல்லியவாறு வாயுவை நாசிகளினால் மிக நிதானமாக வெளியேற்றவும். நம்மை விட்டு வேண்டாத எண்ணங்கள் விலகுவதாக எண்ண வேண்டும்.

"தியோ யோ ந: ப்ரசோதயாத்" என்று மனதில் சொல்லியவாறு சுவாசிக்காமல் இருக்க வேண்டும். இப்போது அன்னை காயத்ரியின் அருள் நம்மீது பொழிவதாக எண்ண வேண்டும். இது நம்முள் ஒரு ஆனந்தத்தை நிரப்பும்.

5. நியாசம்: உடலெங்கும் காயத்ரியின் சக்தியை நிலை நிறுத்துவதற்கு 'நியாசம்' என்ற பெயர். இடது கையில் சிறிது நீர் வைத்துக் கொள்ளவும். வலது கை விரல்களை குவித்துக் கொண்டு, நீரில் தோய்த்து, கீழே குறிப்பிட்ட அங்கங்களை தொட வேண்டும். பக்கத்தில் கொடுத்த மந்திரங்கள் உச்சரித்தவாறு முதலில் வலது பக்கம் அடுத்து இடது பக்கத்தை தொட வேண்டும்.

| | | |
|---|---|---|
| ஓம் வாங்க்மே ஆஸ்யே அஸ்து | - | வாய் ஓரம் |
| ஓம் நசோர்மே பிராணோ அஸ்து | - | நாசிகள் |
| ஓம் அக்ஷோர்மே சக்ஷுரஸ்து | - | கண்கள் |
| ஓம் கர்ணயோர்மே ஷ்ரோத்தமஸ்து | - | காதுகள் |
| ஓம் பாஹ்றோர்மே பலமஸ்து | - | தோள்கள் |
| ஓம் ஊர்வோர்மே ஓஜமஸ்து | - | தொடைகள் |

இடது கையில் நீர் வைத்துக் கொண்டு, வலது கையால் இடது கையை தாங்கியவாறு, கீழே குறிப்பிட்ட மந்திரத்தை உச்சரித்தவாறு, தலை உடல் மீது தெளிக்கவேண்டும்.

"ஓம் அரிஷ்டானிமே அங்கானி
தனுஸ்தன்வாமே ஸஹஸந்து."

## பூஜை

கைகூப்பி கீழே குறிப்பிட்ட மந்திரத்தால் அன்னை காயத்ரியை வந்து அமர பிரார்த்தனை செய்ய வேண்டும். படம் எதிரில் இருந்தால் படத்திலும், இல்லையென்றால் இதயத்திலும் வந்து அமர இந்த பிரார்த்தனை.

आयातु वरदे देवि अक्षरे ब्रह्मवादिनी ।
गायत्रिच्छन्दसां माता ब्रह्मयोनिर्नमोस्तुते ॥

ஆயாது வரதே தேவி அக்ஷரே பிரம்மவாதினி
காயத்ரி சந்தஸாம் மாதாபிரம்மயோநிர் நமோஸ்துதே

## ஜபம்

இதற்குப் பிறகு, முதலில் சொல்லியுள்ள காயத்ரி மந்திரத்தை குறைந்தது 108 தடவை (ஒரு மாலை) ஜபிக்க வேண்டும். இதற்கு மேல் அவரவர் சௌகரியப்படி அதிகம் செய்யலாம். கணக்கிற்கு ஜபமாலை அல்லது கடிகாரத்தின் துணையுடன் செய்யவேண்டும். ஒரு மாலைக்கு கிட்டத்தட்ட பத்து நிமிடம் தேவைப்படும். ஒவ்வொரு தடவை ஜபிக்கும் போதும் நம்முள் இருள் நீங்கி சத்தியத்தின், ஞானத்தின் ஒளிபெறுவது போல் பாவ னையுடன் செய்ய வேண்டும்.

## பிரார்த்தனை

இருகை கூப்பி, அன்னை காயத்ரியை தியானித்து நம் மனதிற்கு ஆத்ம சக்தியையும், நல்ல புத்தியையும், வாழ்க்கைக்கு நல்வழியையும் காண்பிக்க மனதார பிரார்த்தனை செய்ய வேண்டும்.

பிறகு கீழே கண்ட மந்திரம் சொல்லி நமஸ்கரிக்க வேண்டும். இதில் அன்னையை நன்றி தெரிவித்து வழியனுப்புகிறோம்.

உத்தமே ஷிகரே தேவி பூம்யாதி பர்வத முர்த்தினி
பிராஹ்மணோப்யோ ஹய்நுக்யாதா கச்சதேவி யதாசுகம்

தினச் சாதனை முற்றுப் பெற்றது.

# ஸ்ரீ காயத்ரீ அஷ்டோத்தர சத நாமாவளி

ஓம் ஸ்ரீ காய்த்ர்யை நம:
ஓம் ஜகந்மாத்ரே நம:
ஓம் பரப்ரஹ்மரூபிண்யை நம:
ஓம் பரமார்த்தப்ரதாயை நம:
ஓம் ஜப்யாயை நம:
ஓம் ப்ரஹ்மதே ஜோவிவர்த்திந்யை நம:
ஓம் ப்ரஹ்மாஸ் த்ரரூபிண்யை நம:
ஓம் பவ்யாயை நம:
ஓம் த்ரிகாலத்யேயரூபிண்யை நம:
ஓம் த்ரிமூர்த்தி ரூபாயை நம:
ஓம் ஸர்வஜ்ஞாயை நம:
ஓம் வேதமாத்ரே நம:
ஓம் மநோந்மந்யை நம:
ஓம் பாலிகாயை நம:

ஓம் தருண்யை நம:
ஓம் வ்ருத்தாயை நம:
ஓம் ஸுர்யமண்டல வாஸிந்யை நம:
ஓம் மந்தேஹதா நவ த்வம்ஸகார்ண்யை நம:
ஓம் ஸர்வகாரணாயை நம:
ஓம் ஹம்ஸாரூடாயை நம:
ஓம் வ்ருஷுரூடாயை நம:
ஓம் கருடாரோஹிண்யை நம:
ஓம் ஸுபாயை நம:
ஓம் ஷட்குக்ஷிண்யை நம:
ஓம் த்ரிபதாயை நம:
ஓம் ஸுத்தாயை நம:
ஓம் பஞ்சஸீர்ஷாயை நம:
ஓம் த்ரிலோசநாயை நம:
ஓம் த்ரிவேத ரூபாயை நம:
ஓம் த்ரிவிதாயை நம:
ஓம் த்ரிவர்கபலதாயிந்யை நம:
ஓம் தசஹஸ்தாயை நம:
ஓம் சந்த்ரவர்ணாயை நம:
ஓம் விஸ்வாமித் ரவரப்ரதாயை நம:
ஓம் தசாயுத தராயை நம:
ஓம் நித்யாயை நம:
ஓம் ஸந்துஷ்டாயை நம:
ஓம் ப்ரஹ்மபூஜிதாயை நம:
ஓம் ஆதிசக்த்யை நம:
ஓம் மஹாவித்யாயை நம:
ஓம் ஸுரஸ்வத்யை நம:
ஓம் சதுர்வம்சத்ய க்ஷராட்யாயை நம:

| | | |
|---|---|---|
| ஓம் | ஸாவித்ரீயை | நம: |
| ஓம் | ஸத்யவத்ஸலாயை | நம: |
| ஓம் | ஸந்யாயை | நம: |
| ஓம் | ராத்ர்யை | நம: |
| ஓம் | ப்ரபா தாக்யாயை | நம: |
| ஓம் | ஸாங்க்யாயந குலோத் பவாயை | நம: |
| ஓம் | ஸர்வவித்யாயை | நம: |
| ஓம் | ஸர்வமந்த்ராதயே | நம: |
| ஓம் | அவ்யயாயை | நம: |
| ஓம் | சுத்தவஸ்த்ராயை | நம: |
| ஓம் | சுத்தவித்யாயை | நம: |
| ஓம் | சுக்லமால்யாநு லேபநாயை | நம: |
| ஓம் | ஸுரஸிந்நதுஸ மாயை | நம: |
| ஓம் | ஸௌம்யாயை | நம: |
| ஓம் | ப்ரஹ்மலோக நிவாஸிந்யை | நம: |
| ஓம் | ப்ரணவ ப்ரதி பாத்யார் தாயை | நம: |
| ஓம் | ப்ரணதோத்தரண க்ஷமாயை | நம: |
| ஓம் | ஜலாஞ்ஜலி ஸுஸந்துஷ்டாயை | நம: |
| ஓம் | ஜலகர்ப்பாயை | நம: |
| ஓம் | ஜலப்ரியாயை | நம: |
| ஓம் | ஸ்வாஹாயை | நம: |
| ஓம் | ஸ்வதாயை | நம: |
| ஓம் | ஸுதாஸம்ஸ்த்தாயை | நம: |
| ஓம் | சிரௌஷட்வௌஷட் வஷட் க்ரியாயை | நம: |
| ஓம் | ஸுரப்யை | நம: |
| ஓம் | ஷோட சுகலாயை | நம: |
| ஓம் | முநிப்ருந்தநிஷேவி நாயை | நம: |
| ஓம் | யஜ்ஞப்ரியாயை | நம: |

ஓம் யஜ்ஞமூர்த்யை நம:
ஓம் ஸ்ருக்ஸ்ருவாஜ்ய ஸ்வருபிண்யை நம:
ஓம் அக்ஷமாலாதராயை நம:
ஓம் அக்ஷமாலாஸம்ஸ்த் தாயை நம:
ஓம் அக்ஷராக்ருத்தை நம:
ஓம் மதுச்சந்தஸேயை நம:
ஓம் ருஷி ப்ரீ தாயை நம:
ஓம் ஸவச்சந்தாயை நம:
ஓம் ச்சந்தஸாம்நிதயே நம:
ஓம் அங்குளீபர்வஸம்ஸ்த்தா நாயை நம:
ஓம் சதுர்விம்சதிமுத்ரிகாயை நம:
ஓம் ப்ரஹ்மமூர்த்யை நம:
ஓம் ருத்ரசுகாயை நம:
ஓம் ஸஹஸ்ர பரமாம்தகாயை நம:
ஓம் விஷ்ணுஹ்ரு காயை நம:
ஓம் அக்நிமுக்யை நம:
ஓம் சதமத்யாயை நம:
ஓம் தசாவராயை நம:
ஓம் ஸஹஸ்ரதளபத்மஸ்த் தாயை நம:
ஓம் ஹம்ஸரூபாயை நம:
ஓம் நிரஞ்ஜநாயை நம:
ஓம் சராசரஸ்த்தாயை நம:
ஓம் சதுராயை நம:
ஓம் ஸூர்யகோடி ஸமப்ராயை நம:
ஓம் பஞ்சவர்ணமூக்யை நம:
ஓம் தாத்ர்யை நம:
ஓம் சந்த்ரகோடி சுசிஸ்மி தாயை நம:
ஓம் மஹாமாயாயை நம:

ஓம் விசித் ராங்க்யை நம:
ஓம் மாயாபீஜ நிவாஸிந்யை நம:
ஓம் ஸாவயந்த்ரா த்மி காயை நம:
ஓம் சர்வதந்த்ரரூபாயை நம:
ஓம் ஜகத்திதாயை நம:
ஓம் மர்யாதாபாலிகாயை நம:
ஓம் மாந்யாயை நம:
ஓம் மஹாமந்த்ர பலப்ரதாயை நம:

ஸ்ரீ காயத்ரீ அஷ்டோத்தரசத நாமாவளி ஸமாப்தா:

## ஸர்வ காரிய சித்திகளுக்கு ஸ்ரீகாயத்ரி ஸஹஸ்ரநாமம்

ஸ்ரீகாயத்ரி தேவியின் ஆயிரத்து எட்டு நாமங்கள் சிருஷ்டி யின் துவக்கத்தில், ஆண்டவனால் அருளப்பட்ட மிக்க சிரேஷ்ட மான மந்திரமாகும்.

அந்த மந்திரங்கள் பாபங்களை ஒழித்து, பிரம்ம ஞானத்தை கடாஷித்து, இகபர சுகங்களைத் தரக்கூடிய ஒப்பற்ற சக்தி உடையது.

இந்த காயத்ரி சகஸ்ரநாமத்திற்கு ரிஷி பிரம்மா - அனுஷ்டுப் - சந்த்ஸ்: காயத்ரி - தேவதை: பீஜம் - ஹல்: ஸ்வரம் - சக்தி.

அங்கன்னியாசம், கன்னியாசம், மாத்ருகா அக்ஷரங்கள் அமைந்திருக்கின்றன.

இப்பேர்ப்பட்ட ஆயிரத்து எட்டு நாமங்களில் நமக்கு எத்தனையோ விதமான பலன்களைத் தரக்கூடிய மந்திரங்கள் சொல்லப்பட்டுள்ளன. அவற்றுள் சொல்லப்பட்டுள்ள இந்த முக்கியமான பரிகார மந்திரங்களை அனுதினமும் காலையிலும்

மாலையிலும் 108 தடவை ஜபம் செய்வோருக்கு கைமேல் பலன் நிச்சயம்.

1. **எண்ணிய எண்ணங்கள் கைகூடுவதற்கு**

சமாநா சாமதேவீ ச சமஸ்த சுரசேவிதா
சர்வ சம்பத்தி ஜநநீ சத்குணா சகலேஷ்டதா.

2. **பதினாறு பேறுகளும் பெற்று பெரும் வாழ்வு வாழ்வதற்கு**

வசுப்ரதா வரசுதேவீ வாசுதேவ மநோஹரி
வாசவார்சித பாதஸ்வரி: வாசவாரி விநாஸிநீ.

3. **நோயின்றி வாழ்வதற்கு**

சர்வரோக ப்ரசமநீ சர்வபாப விமோசநீ
சமத்ருஷ்டி: ஸ்மகுணா ஸ்ர்வகோப்த்ரி சஹாயிநீ.

4. **ஜாதகத்திலுள்ள விக்னங்கள் விலக**

ப்ரகாரரூபா ப்ராணேஸீ ப்ராணசம்ரக்ஷணீ பரா
ப்ராணசஞ்ஜீவிநீ ப்ராச்யா ப்ராணி: ப்ராணா ப்ரபோதிநீ.

5. **வறுமைநிலை நீங்கி வளமான வாழ்வு பெறுவதற்கு**

தகாரருபா தத்தஸ்ரீ தாரிதர்யச் சேதகாரணீ
தத்தாத்ரேயசய வரதா தராங்கீ தீ நவத்சலா.

6. **அணிமணி ஆபரணங்கள் கிடைப்பதற்கு**

ரத்தப்ராகார மத்யஸ்த்தா ரத்னமண்டப மத்யகா
ரத்நாபிஷேக சந்துஷ்டா ரத்நாங்கீ ரத்ந தாயி நீ.

7. **பொன் பொருள் சேர்க்கை நிலைத்திருப்பதற்கு**

தந்தாந்யா தேஜருபா தநாட்யா தந்தாயிநீ
தநேஸீதர்மநிரதா தர்மராஸ் ப்ரசாதிநீ.

8. **கல்வி கேள்விகளில் சிறந்து விளங்க**

வித்யா வித்யாகழி வித்யாவித்யா ப்ரபோதிநீ
விமலா விபவா வேத்யா விஸ்வஸ்தா விவிதோஜ்வலா.

## காயத்ரி சாதனை மூலம் உடலில் உள்ள சக்தி மையங்களைத் தூண்டுதல்

வாயிலிருந்து வெளிப்படும் சொற்கள், தொண்டை, நாக்கு, குரல்வளை, இதயம் முதலான பல பாகங்களிலிருந்து வெளிவருகிறது. இந்த உண்மை மந்திர வித்யா ஆய்வாளர்களுக்குத் தெரியும். அதன் விளக்கமாவது உடலின் பல பாகங்களிலும் உள்ள சுரப்பிகளும் வாயும் பல நரம்பிளைகளால் இணைக்கப்பட்டுள்ளன. வாயிலிருந்து ஒரு சொல் வெளிப்படும்போது அந்த சுரப்பிகளில் அழுத்த அதிர்வுகள் ஏற்படு கின்றன. அந்த சுரப்பிகளில் ஏதேனும் ஒன்று நோயுற்றாலோ அல்லது அழிந்துவிட்டாலோ அந்த சுரப்பியுடன் சம்பந்தப்பட்ட ஒலிகளை உச்ச ரிக்க முடிவதில்லை. அல்லது அந்த ஒலிகளை உச்சரிக்கும்போது நாக்கு தடுமாற்றம் ஏற்படுகிறது. மனித உடலில் பல சுரப்பிகள் உள்ளன. அவற்றில் சில பெரியவை; சில சிறியவை. சில கண்ணுக்குத் தெரிபவை; சில கண்ணுக்குத் தெரியாதவை. இவை யாவும் உயிர் தங்கும் மையங்கள். ஒவ்வொரு மையத்திலும் ஒரு ஆற்றல் மறைந் துள்ளது என்று யோகிகள் அறிவர். அவற்றில் சூக்குமநாடி சம்பந்தப் பட்ட 6 சக்கரங்கள் யாவரும் அறிந்ததே. உடலில் அவைகளைப் போல் எண்ணற்ற சுரப்பிகள் உள்ளன. சில சொற்களை சொல்லும்போது சில சுரப்பிகள் தூண்டப்படுகின்றன. இதன் அடிப்படையில் தான் மந்திரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. காயத்ரி மந்திரத்தில் 24 எழுத்துக்கள் உள்ளன. 24 எழுத்துக்களும் 24 சுரப்பிகளைத் தூண்டி உண்மையான

ஞானம் வளர உதவுகின்றன. இது காயத்ரி சாதனையின் அடிப்படையான நுட்பவிளைவு.

இந்த எழுத்துக்களின் ஒலி அமைப்பு மிகவும் சிறப்பு வாய்ந்தது. ஒலியில் எத்தகைய ஆற்றல் மறைந்துள்ளது? கண்ணுக்குத் தெரியாத ஒலியின் அதிர்வலைகளில் இருந்து எவ்வகைப் பயன்களைப் பெறமுடியும்? என்பவைகளை ஒலி அறிவியல் அறிஞர்கள் அறிவார்கள். "ஒலியே பிரம்மம்" என்று கூறப்படுகிறது. பிரம்மம் எழுச்சியுறும்போது அதிர்வலையும் பிரம்மத்தின்மேல் மோதும்போது "ஓம்" என்ற ஒலி உண்டாகிறது. ஒரு அதிர்வலை கடிகாரத்தில் ஊசல்குண்டு ஆடுவதுபோல் ஏழுமுறை பிரம்மத்தில் மோதித் திரும்புகிறது. இந்த ஓங்கார ஒலி அதிர்வுகள் படைப்புத் தொழிலை முறைப்படுத்துகின்றன. பிறகு சத்வமான ஹ்ரீம், ராஜஸமான ஷ்ரீம், தாமசப் பண்புள்ள க்லீம் என்னும் மூன்று ஒலி அதிர்வுகளும் இந்தப் பிரணவ ஒலி அதிர்வின் ஓட்டத்தில் இருந்து வெளிப்படுகின்றன. அவற்றிலிருந்து எண்ணற்ற ஒலி அதிர்வுகள் பிரிந்து வெளிப்படுகின்றன. அவைகளுக்கு பீஜ மந்திரங்கள் படைப்புத் தொழிலின் ஒவ்வொரு செயலையும் முறைப்படுத்துகின்றன. காயத்ரி மந்திரத்தில் பீஜமந்திர எழுத்துக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு முறையாக இணைக்கப்பட்டுள்ளன. அதனால் அதை உச்சரிப்பதால் உண்டாகும் சக்தி ஓட்டம் தனிச்சிறப்பு மிக்கதாக உள்ளது.

தீபக ராகம் அணைந்த விளக்கை எரியச் செய்கிறது. மேக-மல்ஹார் ராகம் மழையைப் பொழியச் செய்கிறது. குழலிசை நாகத்தைப் படமெடுத்து ஆடச் செய்கிறது; மானை மெய்

மறந்து நிற்கச் செய்கிறது; பசுவை தானாகவே பால் சுரக்கச் செய்கிறது. குயிலின் இசை உணர்ச்சிகளைத் தூண்டுகிறது. படைவீரர்கள் முறையாக நடைபோட்டுச் செல்லும்போது பாலங்கள் இடிந்து விழுகின்றன. அதனால், படை வீரர்களுக்கு பாலங்களின்மேல் செல்லும்போது சாதாரணமாக நடந்து செல்லவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் டாக்டர் ஹட்சீசன் பல்வேறு இசை ஒலிகளைக் கொண்டு பல தீராத நோய்களைப் போக்குவதில் வெற்றி கண்டுள்ளார். இந்தியாவில் தாந்திரீகர்கள் ஒரு பானை மீது ஒரு உலோகத் தகட்டை வைத்து அதை ஒரு குறிப்பிட்ட வேகத்தில் அசைத்து, குறிப்பிட்ட ஒரு வகை ஓசையை உண்டாக்கி அதன் மூலம் பாம்பு விஷத்தையும், தேள் கடி விஷத்தையும் நீக்குகிறார்கள். காரணம் இதுதான். ஒலி அதிர்வுகள் ஈதரில் பரவுகின்றன. அப்போது அதேவகை அதிர்வு அணுக்களைக் கவர்ந்து கொண்டு புறப்பட்ட இடத்திற்குத் திரும்புகின்றன. அதனால் மின்னோட்டம் உண்டாகி பாம்பு கடித்த அல்லது தேள் கொட்டிய இடத்தில் பாதிப்பை உண்டாக்கி, விஷத்தின் பாதிப்பை நீக்கி விடுகிறது. இதுபோல எல்லா மந்திரங்களும் விந்தைகள் புரிகின்றன; காயத்ரி மந்திரத்திலும் சக்தி பிறக்கிறது. காயத்ரி மந்திரத்தை சொல்லும்போது அதன் ஒலிகள் வாயில் உள்ள சில இரத்தக் குழாய்களில் அதிர்வுகளை ஏற்படுத்தி சில குறிப்பிட்ட சுரப்பிகளை தூண்டுகின்றன. அந்த சுரப்பிகள் தூண்டப்பட்டவுடன் வேத இசை ஒலி உண்டாகி ஈதர் மூலம் பிரபஞ்சம் முழுவதும் விரிந்து மீண்டும் சுருங்கி கிளம்பிய

இடங்களான சுரப்பிகளை வந்தடைகிறது. திரும்பி வரும்பொழுது அந்த மந்திரத்தில் உள்ள ஒவ்வொரு ஒலியும் அதை ஒத்த அணுக்களை ஈர்த்துக் கொண்டுவந்து சாதகனிடம் சேர்க்கிறது. அதன் மூலம் சாதகன் விரும்பிய பலன் கிடைக்கிறது. ஒரு சாதகன் காயத்ரி மந்திரத்தை சொல்லும்போது நன்மை செய்யும் சக்தி வாய்ந்த இசை ஒலி அதிர்வுகளைத் தூண்டிவிடுகிறான். இதற்கு சாதனை என்று பெயர். அதன் மூலம் அவனுடைய ஆன்மசக்தியின் நுண்மையான உள்உணர்வுகள் தூண்டப்படுகின்றன. அத்தூண்டலுக்கு ஆராதனை என்று பெயர். இவ்வாறு சாதனையும் ஆராதனையும் (புறத்தூண்டலும், அகத்தூண்டலும்) இணையும் போது காயத்ரி சக்தி வலிமை பெற்று, சாதகனுக்கு பெரும் தெய்வீக அருட்பேறாகக் கிடைக்கிறது.

சாதகன் காயத்ரி மந்திரத்தில் வைக்கும் நம்பிக்கையும் விசுவாசமும் அதன் ஆற்றலை மிகவும் அதிகமாக்குகின்றன. நம்பிக்கை எவ்வளவு சக்தி வாய்ந்தது என்பதை உளநூல் அறிஞர்கள் அறிவர். துளசிதாசர் இராமாணத்தில் விசுவாசத்தை பவானிதேவிக்கும், நம்பிக்கையை சிவனுக்கும் ஒப்பிட்டிருக்கிறார். நம்பிக்கைக்கு ஒரு புதர்செடியை பேயாகவும், ஒரு கயிற்றை பாம்பாகவும் மாற்றும் சக்தி உண்டு; அதேபோல் அதற்கு ஒரு கற்சிலையை கடவுளாக மாற்றும் ஆற்றலும் உண்டு. சிலர் தங்கள் விசுவாசம், நம்பிக்கை இவற்றின் காரணமாக தங்கள் செல்வத்தையும், வசதிகளையும், உயிரையும்கூட மகிழ்வுடன் தியாகம் செய்கிறார்கள்.


ஏகலைவன், கபீர் போன்றவர்கள் நேரடியாக குருவிடம் தீட்சைப் பெற்று ஆற்றலைப் பெற்றவர்களல்ல. அவர்களுடைய விசுவாசமே அவர்களின் சாதனைகளுக்கு ஆதாரமாக இருந்தது. ஹிப்னாடிசம் என்னும் அரிதுயிலில் ஆழ்த்தும் கலையின் அடிப்படையே நோயாளியின் இதயத்தில் நம்பிக்கையை ஊட்டுவதுதான். நோயாளிகளின் நம்பிக்கையைக் கொண்டே தாந்ரீகர்கள் மந்திரங்களின் மூலம் ஆச்சரியப்படும் வண்ணம் நோய்களைப் போக்குகிறார்கள். ஒரு சாதகன் தாந்திரீக மந்திரங்களை நம்பிகையில்லாமல் 100 முறை கூறினாலும் எவ்வித பயனம் இருக்காது. இது காயத்ரி மந்திரத்திற்கும் பொருந்தும்.

ஒவ்வொரு எழுத்தின் சக்தி மையங்களும் உடலில் எங்கெங்கு உள்ளன என்று படத்தில் காட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு எழுத்தின் பிரபஞ்ச சக்திகளும் அவைகளால் கிடைக்கும் பலன்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.



| மந்திர எழுத்துக்கள் | ஒவ்வொரு எழுத்துக்கும் உரிய சக்திகள் | ஒவ்வொரு சக்தியும் அளிக்கும் பலன்கள் |
|---|---|---|
| தத் | நுபினி | வெற்றி |
| ச | சாமுண்டி | வீரம், வலிமை |
| வி | விஷ்வா | நற்பலன்கள் |
| துர் | துஷ்டி | நல்வாழ்வு |
| வ | வரதாம்பிகை | யோகம் |
| ரே | ரேவதி | பிரிந்தோர் சேருதல், திருமணம் கூடல், அன்பு |
| ணி | சூக்ஷ்மா | செல்வம் |
| யம் | ஞானாம்பிகை | தேஜஸ், அறிவொளி |
| பர் | பார்க்கவி | பாதுகாப்பு |
| கோ | கோமதி | அறிவு, ஞானம் |
| தே | தேவிகா | தீயசக்திகளை அழித்து நலம் புரிதல் |
| வ | வராகி | நிஷ்டை, தவயோகம் |

| | | |
|---|---|---|
| ஸ்ய | சிந்தூரணி | தாரணை (இருப்பதை அழியாமல் காக்கும் திறன்) |
| தீ | தியானாம்பிகை | நீண்ட ஆயுள், கண்டங்கள் வராமல் காத்தல் |
| ம | மர்யாதா | புலனடக்கம், தவ வைராக்கியம் |
| ஹி | ஸ்புட நாயகி | தவம் கூடிவருதல் |
| தி | மேதா | வருங்காலத்தை முன்னரே உணர்த்தல் |
| யோ | யோக மாயா | விழிப்புணர்ச்சி, நன்னெறிக்குத் திரும்புதல் |
| யோ | யோகினி | உணவு, தொழில் உற்பத்தி பெருக்கம் |
| நஹ் | தாரணி | இல்லற இன்பம் |
| ப்ர | ப்ரபவா | உயர்ந்த குறிக்கோள் |
| சோ | ஊஷ்மா | தைரியம் |
| த | த்ரஷ்யா | விவேகம் (நல்லறிவு) |
| யாத் | நிரஞ்சனாதேவி | சேவை (தொண்டு மனம்) |


ஓ
தத்
வி
ஸ
துர்
வ
ரே
ண்யம்
யோ
யோ
பர்
கோ
தே
வ
ஸ்ய
ம
தீ
ஹி
ப்ர
ந:
சோ
தீ
த
யா
த்

"காயத்ரி" பக்தனுக்கு மேற்கண்ட 24 ஆற்றல்களும் கிடைக்க தூண்டுகோலாக அமைகிறது. இந்த ஆற்றல்களுடன் பலவகையான சித்திகளும் வளமான வாழ்க்கையும் கிடைக்கின்றன. பெரும்பாலான மக்கள் இந்த பேறுகளையெல்லாம் தாங்கள் வழிபடும் தெய்வம்தான் அளிக்கிறது என்று எண்ணுகிறார்கள். காரணம் அவர்களால் தங்களுக்குள் ஏற்படும் நுண்மையான மாறுதல்களை புரிந்துகொள்ள முடிவதில்லை. தங்கள் ஆன்ம சாதனையின் விளைவாக ஏற்படும் நுட்பமான மாறுதல்களை புரிந்து கொண்டால், அடுத்த வினாடியே இவையெல்லாம் எங்கிருந்தோ கிடைத்த எதிர்பாராத பேறுகள் என்று எண்ணமாட்டார்கள். இவைகள் முறையான அறிவியல் பூர்வமான ஆன்மீகக் கல்வியின் விளைவுகளே என்று உணர்வார்கள். காயத்ரி சாதனை ஒரு குருட்டு நம்பிக்கையல்ல; அது ஒரு உருப்படியான, நிச்சயமாக நலம் பயக்கக் கூடிய அறிவியல் சாதனை.



# ஸ்ரீ காயத்திரி வழிபாடு



அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்
320, செட்டியார் தெரு,
கொழும்பு -11
தொலைபேசி: 334004